# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044–2838 9038; email: eligibility@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in

**Lr.No.TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/244** **Date: 10.09.2018**

முனைவர் நா.இரவீந்திரநாத் தாகூர், Ph.D **Web-posting**
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து எம்.எட் கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – எம்.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - எம்.எட் சேர்க்கை மற்றும் சேர்க்கைக்கான தகுதிக்கட்டணம் செலுத்த கடைசி நாள் - அறிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** இப்பல்கலைக்கழக கடித எண்: **TNTEU/R/Elig /2018/215**, நாள் 10.08.2018.

-------

தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளில், நடப்புக்கல்வி ஆண்டுக்கான (2018-2019) எம்.எட் சேர்க்கைக்கு கடைசி நாள் 17.09.2018 மாலை 5.45 மணி ஆகும். அதற்குப் பின்னர் கல்வியியல் கல்லூரிகளால் செய்யப்படும் எம்.எட் மாணவர் சேர்க்கைக்கு எக்காரணத்தைக்கொண்டும் இப்பல்கலைக்கழகம் சேர்க்கை அங்கீகாரம் (Eligibility) வழங்காது எனத் தெரிவித்துக்கொள்ளலாகிறது.

17.09.2018-ஆம் தேதிக்குள் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது விவரங்களை, பார்வையில் கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்தபின் இணையதளத்திலிருந்து மாணவர்களது விவரப்பட்டியல்களை (Students individual forms, Form-A & Form-B) பதிவிறக்கம் (download) செய்யவும்.

கல்வியியல் கல்லூரிகள் பதிவேற்றம் செய்த மாணவர்களது தகவல்களை, அவர்களது அசல் கல்வி மற்றும் சாதிச் சான்றிதழ்களுடன் பல்கலைக்கழக அதிகாரிகள் சரிபார்ப்பதற்காக, கீழ்க்கண்ட ஆவணங்களைக் கீழே கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ள நாட்களில் அதற்கெதிரே குறிப்பிட்டள்ள மாவட்டங்களில் இயங்கும் கல்லூரிகள் பல்கலைக்கழகத்திற்கு நேரில் வந்து சமர்ப்பிக்கவேண்டும்.

1. சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது தகுதிக்கட்டணம் (eligibility fee), 18.09.2018 அல்லது அதற்கு முந்தைய தேதிகளில் ஒரே வங்கி வரைவோலையாக எடுத்து, அதன் பின்புறம் கல்லூரி எண் மற்றும் மாணவர்களது மொத்த எண்ணிக்கையை குறிக்கவும்.

2. மாணவர்கள் பூர்த்தி செய்து, சேர்க்கைக் குழுவால் சரிபார்க்கப்பட்டு, முதல்வர் கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுடனும், முதல்வர் சான்றொப்பமிட்ட கல்வி, மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல்களை இணைக்கவும்.

3. சேர்க்கை செய்யப்பட்ட அனைத்து தகுதியான மாணவர்களின் அசல் (original) கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள்.

4. மாணவர்களது விவரங்கள் பதிவேற்றம் செய்து, பின் இணையதளத்திலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியே பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (Individual online Admission Application Printouts)

5. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் (Form-A)

6. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் தகுதிப் பட்டியல் (Form-B)

7. அண்மையில் NCTE Regulation-2014 விதியின்படி வழங்கிய அங்கீகார (Recognition) ஆணையின் நகல், கடைசியாக பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற இணைவு / தொடர் இணைவு (Provisional / Continuation of Provisional Affiliation) ஆணையின் நகல்கள் மற்றும் எம்..எட். படிப்புக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழகம் தகுதி ஒப்புதல் வழங்கிய ஆணையின் நகல்கள் (M.Ed. Staff Approval ).

## அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புக்கான கால அட்டவணை

| தேதி | சான்றிதழ் சரிபார்ப்புக்கான கல்லூரிகள் இயங்கும் மாவட்டங்கள் |
|---|---|
| 28.09.2018 | கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, சென்னை, கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், தேனி, சிவகங்கை, திண்டுக்கல் |
| 01.10.2018 | விருதுநகர், கரூர், பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், அரியலூர் |
| 02.10.2018 | தஞ்சாவூர், வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர் |

அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு முடிந்தபின்பு, அன்றே அசல் கல்வி மற்றும் சாதிச் சான்றிதழ்களைத் திரும்பப் பெற்றுச் செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.

**இச்சுற்றிக்கையானது, NCTE வழங்கிய Recognition ஆணை மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் 2018-2019-ஆம் ஆண்டுக்கான இணைவு/தொடர் இணைவு (provisional / continuation of provisional affiliation) பெறாத கல்வியியல் கல்லூரிகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் பொருந்தாது.**

10/9/18

பதிவாளர் (பொ)

குறிப்பு: இவ்வாண்டின் எம்.எட். சேர்க்கைக்கு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக பி.எட் தேர்வில் (2016-2018) வெற்றி பெற்ற மாணவர்களின் தேர்வு முடிவு நகல் (Result copy) இணைத்தல் மட்டும் போதுமானது.